



கால்நடை பராமரிப்பு,
பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

# மீன்வளம்

மானியக் கோரிக்கை எண் : 7

# அறிவிப்புகள்

2017-2018

காலநடை பராமரிப்பு,
பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

# மீன்வளம்

## மானியக் கோரிக்கை எண் : 7

## அறிவிப்புகள்
## 2017-2018


## D.ஜெயக்குமார்
மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்

## 1. தமிழ்நாட்டில் 10 கடலோர கிராமங்களில் 89 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடற்கரைச் சார்ந்த வசதிகளுடன் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் பயனுறும் வகையில், 2017–18 ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பினைத் தொடர்ந்து, பாக் நீரிணை பகுதியில் மீன்பிடி படகுகளின் நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், கடல் மீனவர்கள் தங்களது மீன்பிடி கலன்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், படகு அணையும் தளம், T–ஜெட்டிகள் மற்றும் கடற்கரைச் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய மீன் இறங்கு தளம் இராமநாதபுரம் மாவட்டம் குந்துகால் மீனவ கிராமத்தில் அமைக்கப்படும்.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கோடியக்கரை, சின்னங்குடி, காமேஷ்வரம், புஷ்பவனம்; தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார்; புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டுமாவடி, பொன்னகரம்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் சூலேரிகாட்டுக்குப்பம் மற்றும் கடலூார் மாவட்டத்தில் தாழங்குடா ஆகிய 10 மீனவ கிராமங்களில் நடப்பாண்டில், **இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 89 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ‘நபார்டு’ நிதி உதவியுடன் கடற்கரைச் சார்ந்த வசதிகளுடன் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.

## 2. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஆரியநாட்டுத்தெருவில் மீன் இறங்குதள உட்கட்டமைப்பு வசதிகள் 1 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்துதல்.

நாகப்பட்டினம் மாவட்டம் ஆரியநாட்டுத்தெரு மீனவ கிராமத்தில் சுமார் 1,800 மீனவர்கள் மீன்பிடித் தொழிலை ஆதாரமாக கொண்டு வாழ்கின்றனர். இங்கு 13 விசைப்படகுகளும் 250 நாட்டுப் படகுகளும் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இக்கிராமத்தில் மீன் இறங்குதள கடற்கரை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் மீன் இறங்குதள உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்ட நிதி உதவியுடன் ஏற்படுத்தப்படும்.

## 3. பாரம்பரிய கட்டுமரங்களை கண்ணாடி நாரிழைப் படகுகளாக மாற்றிட மீனவர்களுக்கு 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் மானியம் வழங்குதல்.

தமிழ்நாட்டில் கட்டுமரங்களை உருவாக்கிட தேவைப்படும் ‘அல்பீசியா’ மரங்கள் சுலபமாக கிடைக்க பெறாமையால், மீனவர்கள் அவர்களது பழுதான மற்றும் நீண்ட காலம் பயன்படுத்திய கட்டுமரங்களை பழுது நீக்கவோ அல்லது புதிதாக கட்டிடவோ மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர்.

எனவே, மீனவர்கள் படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, 2017–18 ஆம் ஆண்டில் கட்டுமரங்களுக்கு மாற்றாக மீன்பிடி உபகரணங்களுடன் கண்ணாடி நாரிழைப்படகு உருவாக்கிட அலகு ஒன்றிற்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக இரண்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து ஐநூறு ரூபாய் வீதம் 100 மீனவர்களுக்கு **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

## 4. அசாதாராண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடி படகுகள் / மீன்பிடி உபகரணங்கள் / வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடும் பொருட்டு 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் தனிநிதியம் ஏற்படுத்துதல்

மீனவர்கள் கடலில் இயற்கையின் கருணையாலேயே அவர்களது வாழ்வாதாரமான மீன்பிடி தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். மோசமான வானிலை மற்றும் நடுக்கடலில் சில சமயங்களில் ஏற்படும் விபத்துகளின் காரணமாக மீன்பிடி படகுகள் மற்றும் அவர்களது உடைமைகள் சேதத்திற்குள்ளாகும்போது, அவர்களின் சேதமடைந்த படகுகளை உடனடியாக சரி செய்திட இயலாத நிலையில், தங்கள் வாழ்வாதாரத்தை இழக்கின்றனர். மேலும் சில அசாதாரண சூழ்நிலைகளில் கடற்கரையோரங்களில் வீடுகளும் சேதமடைகின்றன.

எனவே, மீனவர்கள் படும் துயரினை களைந்திடும் பொருட்டு, 2017–18ம் ஆண்டில் மீனவர்களின் சேதமடைந்த மீன்பிடி படகுகள் / மீன்பிடி உபகரணங்கள் / வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிட 13 கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு தலா பத்து இலட்சம் ரூபாய் வீதம் வழங்கிட **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாயில் தனி நிதியம் (Corpus fund) ஏற்படுத்தப்படும்.

## 5. இ–சேவை மையங்கள் வாயிலாக மீனவர் நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்துதல்

2013–14 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மீனவர் நலத்திட்ட உதவிகளும் தேசிய மின்னணு பண பரிமாற்றம் (NEFT) மூலமாக ஒவ்வொரு மீனவ/மீனவ குடும்ப பயனாளியின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

வெளிப்படைத்தன்மையுடன் திட்டங்களைக் கையாளும் திறனை மேம்படுத்திட, **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அனைத்து மீனவ நலத்திட்டங்களுக்கான விண்ணப்பத்தினை இ–சேவை மையங்களின் வழியாக சமர்ப்பித்திடும் முறை நடப்பாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.

## 6. கணவாய் மீன்பிடி உபகரணங்கள் 50 விழுக்காடு மானியத்தில் வாங்கிட 25 இலட்சம் ரூபாய் வழங்குதல்

மீனவர்கள் புதிய தொழில்நுட்பங்களை கையாண்டு, மாற்று முறையில் கணவாய் மீன்கள் பிடிக்க ஏதுவாகவும், அவர்களது வருவாயினை பெருக்கிடும் நோக்கிலும், கணவாய் மீன்பிடி உபகரணங்களை 100 நாட்டுப்படகு மீனவர்கள் 50 விழுக்காடு மானியத்தில் வாங்கிட 2017–18 ஆம் ஆண்டில், **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 25 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

## 7. கடல் மீன்வள கூட்டு மேலாண்மையினை சிறந்த முறையில் செயல்படுத்தும் மூன்று கூட்டு மேலாண்மைக் குழுக்களுக்கு மாநில அளவில் விருதுகள் வழங்குதல்

மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மற்றும் பங்குதாரர்கள் ஒன்று சேர்ந்து மீன்வளத்தை சிறந்த முறையில் பாதுகாக்கவும், நிர்வகிக்கவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் மற்றும் அதற்கான பொறுப்பான முடிவுகளை அரசுடன் இணைந்து மீனவர்களே எடுப்பதற்கு ஏதுவாக, 13 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கிய மண்டல, மாவட்ட மற்றும் கிராம அளவிலான கடல் மீன்வளக் கூட்டு மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இம்மீன்வள கூட்டு மேலாண்மை குழுக்களின் செயல்பாடுகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் சிறப்பாக செயல்படும் மூன்று கடல் மீன்வளக் கூட்டு மேலாண்மைக் குழுக்களுக்கு, **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ரொக்கப் பரிசு மற்றும் விருதுகள் வழங்கப்படும்.

## 8. கிருஷ்ணகிரி அரசு மீன்பண்ணையில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணைத் திலேப்பியா பொரிப்பகத்தினை 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்துதல்

குறுகிய கால நீர் நிலைகளில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ளவும், வேளாண்மையுடன் மீன்வளர்ப்பினை ஒருங்கிணைத்து விவசாயிகளின் வருவாயினை அதிகரித்திடவும், குறுகிய காலத்தில் வேகமாக வளரக்கூடிய மீன் இனமான ‘மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா’ மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்திட ஏதுவாக, கிருஷ்ணகிரியில் ஒரு பொரிப்பகத்தை அரசு ஏற்கனவே நிறுவியுள்ளது.

**இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இப்பொரிப்பகம் 2017–18 ஆம் ஆண்டில் மேலும் விரிவுபடுத்தப்படும்.

## 9. உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை மேம்படுத்த மீன்பிடி வலைகள் மற்றும் கண்ணாடி நாரிழை பரிசல்கள் வாங்குவதற்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்குதல்

தமிழ்நாட்டிலுள்ள நீர்த்தேக்கங்கள், குளங்கள் மற்றும் குட்டைகளில் மீன்பிடிப்பினை தங்களது வாழ்வாதாரமாக கொண்டுள்ள உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு, அவர்களது மீன்பிடி திறனை மேம்படுத்த மீன்பிடி வலைகள் நபர் ஒருவருக்கு 20 கிலோ வீதமும் மற்றும் கண்ணாடி நாரிழை பரிசல்கள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமாக, **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 10. மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்ப்பாசன ஏரிகளின் மீன்பாசி குத்தகையினை உள்நாட்டு மீனவக் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்குதல்

தமிழ்நாட்டில் மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்ப்பாசன ஏரிகளில் உள்ள மீன்பாசி குத்தகை தற்போது பொது ஏல முறையில் விடப்பட்டு வருகிறது. இதனால்,இந்த நீர்ப்பாசன ஏரிகளின் மீன்வள ஆதாரங்களைத் தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள உள்நாட்டு மீனவச் சங்க உறுப்பினர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவதாகவும், அம்மீன்பாசி குத்தகையினை உள்நாட்டு மீனவக் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கிட வேண்டும் என்றும் பல்வேறு மீனவக் கூட்டுறவு சங்கங்கள் அரசுக்கு கோரிக்கைகளை வைத்துள்ளன. எனவே, அவர்களது கோரிக்கையினை ஏற்று, **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்ப்பாசன ஏரிகளின் மீன்பாசி குத்தகையினை, உள்நாட்டு மீனவக் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

## 11. வேளாண் விவசாயிகள் பல்நோக்கு பண்ணை குட்டைகள் அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்வதை ஊக்குவிக்க 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மானிய உதவி வழங்குதல்

வேளாண் விவசாயிகள் பல்நோக்கு பண்ணை குட்டைகள் அமைப்பதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதோடு, நீர் பற்றாக்குறை காலங்களிலும் வேளாண் பணிகளுக்கு நீர் கிடைப்பதையும் உறுதி செய்யலாம். மேலும், இந்த பல்நோக்கு பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பில் ஈடுபட வேளாண் விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் மீன் உற்பத்தி அதிகரிப்பதுடன் அவர்களது வருவாயும் உயரும். எனவே 2,500 ச.மீ அளவில் பல்நோக்கு பண்ணை குட்டை அமைத்து, மீன்குஞ்சுகள் மற்றும் மீன்தீவனம் போன்ற இடுபொருட்களை 50 விழுக்காடு மானியத்தில் வழங்கிட நடப்பாண்டில், **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 200 பல்நோக்கு பண்ணை குட்டைகளில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ள ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

## 12. மீன் பண்ணைகள் மற்றும் இறால் பண்ணைகளில் உள்ள நீரை மறுசுழற்சி முறையில் பயன்படுத்துதல் மற்றும் மறு பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் சிறந்த பண்ணையாளர்களுக்கு விருதுகள் வழங்குதல்

தமிழ்நாட்டில் தற்போது நிலவும் பருவமழை மாற்றத்தின் காரணமாக,நீர்வள ஆதாரங்கள் குறிப்பாகநிலத்தடிநீர் ஆதாரம் குறைந்து கொண்டே வருகிறது. எனவே, அதனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தினை கருத்தில் கொண்டு, மீன் வளர்ப்பினை மேற்கொள்ள தேவைப்படும் நீரை, மறு சுழற்சி முறையில் மீளப் பயன்படுத்துதல் மற்றும் மீன்வளர்ப்பிற்கு நீரை பயன்படுத்திய பின், வேளாண் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி சிறந்த நீர் மேலாண்மை முறைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும், சிறந்த நீர் மேலாண்மை முறைகளை மீன்வளர்ப்பில் மேற்கொள்ளும் மூன்று மீன் வளர்ப்போர்களுக்கு **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மாநில அளவில் மூன்று விருதுகள் வழங்கப்படும்.

## 13. மீன்வளத்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் மீன்வள மேற்படிப்பினை தொடர ஏதுவாக ஒதுக்கீடு மற்றும் அனுமதி வழங்குதல்.

மீன்வளத்துறையில் பணியாற்றும் அலுவலர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தி, அதன்மூலம் மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போர் பயன்பெறும் வகையில், மீன்வளமேற்படிப்பினை மேற்கொள்ள, முதுநிலை பட்டப்படிப்பில் 2 இடங்களும் மற்றும் முனைவர் பட்டப்படிப்பில் (Ph.D) 1 இடமும், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், மீன்வள மேற்படிப்பினை தொடரும் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு, அவர்கள் மேற்படிப்பினை தொடரும் காலத்தில் அவர்களுக்குரிய ஊதியம் மற்றும் இதர படிகள், **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** வழங்கப்படும்.

## 14. மீன்வளத்துறையின் துரிதமான செயல்பாட்டிற்கு ஒருங்கிணைந்த உள்சுற்று கைப்பேசி பயன்படுத்துவோர் குழு (CUG) திட்டம் செயல்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளத்துறையானது மீனவர் நலத்திட்டங்கள் மற்றும் மீன்வள மேம்பாட்டு பணிகள் ஆகியவற்றை செயல்படுத்துவதோடு, இயற்கை பேரிடர் காலங்களில் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எனவே, மீன்வளத்துறை அலுவலர்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்தி, திட்டங்களை விரைந்து செயல்படுத்திட ஏதுவாக, **இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மீன்வளத்துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த உள்சுற்று கைப்பேசி பயன்படுத்துவோர் குழு (Closed User Group) திட்டம் ஆண்டிற்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

## 15. சென்னை தேனாம்பேட்டையிலுள்ள தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கடல் மீன் உணவகத்தினை 1 கோடி ரூபாய் செலவில் நவீன மயமாக்குதல்

சென்னை தேனாம்பேட்டையில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஒரு கடல் மீன் உணவகத்தினை நடத்தி வருகிறது. இவ்வுணவகத்தினை கலைநுட்பத்துடன் கூடிய மீன்காட்சியகம், காட்சிப்பொருட்கள், பண்டகம் மற்றும் பரிமாற்ற சேவை வசதிகளுடன், ஒரே நேரத்தில் 60 நபர்கள் உணவருந்தக்கூடிய வகையில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் சொந்த நிதியில் 2017–18 ஆம் ஆண்டில், **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஒரு கோடி ரூபாய் செலவில், நவீனப்படுத்தப்படும்.

# 16. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக பணியாளர்களுக்கு ஒய்வூதிய கருணைத் தொகை வழங்குதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பல்வேறு மீன்வளப் பணிகள் மற்றும் மீனவ நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தற்போது 122 பணியாளர்கள் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வருகின்றனர். 2004–ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இலாபத்தை ஈட்டி வரும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பணியாளர்களுக்கு ஓய்வூதிய பலன்கள் அளிக்க வழிவகையில்லாததால், ஓய்விற்குப் பின் அப்பணியாளர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக ஊழியர்களின் பணி ஓய்வுக்குப்பின் அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்தில் கொண்டு **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஓய்வூதிய கருணைத் தொகை வழங்கப்படும்.

## 17. சென்னை, வாணியஞ்சாவடியிலுள்ள அரசு இறால் பண்ணையினைப் பசுமைப் பூங்காவாக மேம்படுத்திட ஆய்வு மேற்கொள்ளுதல்.

சென்னை, சேத்துப்பட்டில், பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்புடன் கூடிய பசுமைப் பூங்காவினை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் பராமரித்து, இயக்கி வருகிறது. இப்பூங்கா, பொதுமக்களை குறிப்பாக குழந்தைகளை கவர்ந்து அமோக வரவேற்பினைப் பெற்றுள்ளது.

மீன்வளச் சுற்றுலாவை மேம்படுத்திட, சென்னைக்கு அருகே வாணியஞ்சாவடியில் எழில்மிகு கிழக்கு கடற்கரை கழிமுகப்பகுதியில் அமைந்துள்ள அரசு இறால் பண்ணையினை, சேத்துப்பட்டு பசுமைப் பூங்காவைப் போன்று எழிலுடன் கூடிய வாணியஞ்சாவடி பசுமைப் பூங்காவாக உருவாக்கிட தேவையான சாத்தியக்கூறு ஆய்வுகளை, **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளும்.

## 18. மீனவர்கள் பிடிக்கும் மீன்களை சுகாதாரத்தோடும், நல்ல தரத்தோடும் நுகர்வோர்களுக்கு அளித்திடும் வகையில் குளிர்சாதன வசதிகளுடன், குளிர் சங்கிலி (Cold Chain) அமைப்பினை உருவாக்கிட 10 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.

மீனவர்கள் பிடிக்கும் மீன்களை சுகாதாரத்தோடும், நல்ல தரத்தோடும் நுகர்வோர்களுக்கு அளித்திடும் வகையில், குளிர்சாதன வசதிகளுடன் கூடிய கொள்முதல் மையங்கள், சேவை மையங்கள் மற்றும் விற்பனை மையங்களை ஒருங்கிணைத்து, மீன்களை ஏற்றி செல்வதற்கு குளிர்சாதன வசதிகளுடன் கூடிய வாகனங்களுடன் ‘குளிர் சங்கிலி’ (Cold Chain) அமைப்பதற்கான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது குறித்து சாத்தியக் கூறு ஆய்வுகளை மீன்வளப்பல்கலைக்கழகம் மற்றும் மீன்வளத்துறை உதவியுடன், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலமாக, 2017–18 ஆம் ஆண்டில் **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 10 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 19. கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளும் சிறந்த மீனவ குழுக்களுக்கு மாநில அளவில் விருதுகள் வழங்குதல்.

கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்வதற்கு மாற்றாக, கூண்டுகளில் கடல்மீன் வளர்ப்பினை மேற்கொள்வதால் குறைந்த நீர்ப்பரப்பில் அதிக மீன் உற்பத்தி செய்திட இயலும். இம்மீன்வளர்ப்பு மீனவர்களுக்கு ஒரு மாற்று வாழ்வாதாரத் தொழிலாகவும் அமையும். தமிழ்நாட்டில் ஏற்கனவே 5 மாவட்டங்களில் கொடுவா, கடல் விரால், கலவா, சிங்கி இறால் போன்ற மீன்களை மிதவைக் கூண்டுகளில் மீனவர் குழுக்களால் இருப்பு செய்து மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, மிதவைக் கூண்டுகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில், மிதவைக் கூண்டுகளில் சிறப்பாக மாநில அளவில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ளும் மூன்று குழுக்களுக்கு **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** விருதுகள் வழங்கப்படும்.

## 20. தமிழ் நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் மூலம் மீன்வளர்ப்போரின் திறன் மேம்பாட்டிற்க்கான பயிற்சி மற்றும் செயல்விளக்கம் 1 கோடியே 53 ஆயிரம் ரூபாய் செலவில் அளித்தல்.

தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பில் நவீன தொழில் நுட்பத்தில் பயிற்சி மற்றும் செயல் முறை விளக்கங்களை அளித்து, மீன்வளர்ப்பினை சுயதொழிலாக மேற்கொள்வோர்களிடம் ஆர்வத்தினை உருவாக்கிட ஏதுவாக, தமிழ் நாடு மீன்வளப்பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வளங்குன்றா நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையங்கள் மூலம் 2017–18 ஆம் ஆண்டில், **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**, ஒரு கோடியே 53 ஆயிரம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும்.

## 21. தமிழ் நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் மூலம் சுய உதவி குழுக்கள் மற்றும் இளைஞர்கள் பயனுரும் வகையில் மீன்பதன தொழில்நுட்பப் பூங்கா மற்றும் தொழில்காப்பகம் 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவுதல்

சுய உதவி குழுக்கள் மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயனுரும் வகையில், குறைந்த விலைக்கு விற்கப்படும் மீன்களைப் பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட மீன்பொருட்கள் தயாரித்தல், இயந்திரம் வடிவமைத்தல் மற்றும் உலர் மீன் தயாரிப்பதற்கான சூரிய உலர்த்தி வடிவமைத்தல், போன்றவற்றில் தேவையான பயிற்சிகளை அளித்து வேலைவாய்ப்பினை உருவாக்கிட, 2017–18 ஆம் ஆண்டில், **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன்பதன தொழில்நுட்பப் பூங்கா மற்றும் தொழில்காப்பகம் நிறுவப்படும்.

## 22. உயிரின குழும திரட்டு தொழில்நுட்பம் (Bio Floc Technology) கொண்டு இறால் மற்றும் மீன் வளர்ப்பில் வளங்குன்றா உற்பத்தியை உறுதி செய்யும் தொழில்நுட்பம் 57 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் உருவாக்குதல்

பொன்னேரி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உயிரின குழுமத் திரட்டைக் கொண்டு இறால் வளர்ப்பில் வளங்குன்றா உற்பத்தியை உறுதி செய்யும் வகையில் **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 57 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் தொழில்நுட்பம் உருவாக்கப்படும். ஆரோக்கியமான வெள்ளைக்கால் இறால் மற்றும் மரபணு மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பிய மீன்கள் வளர்ப்பதை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## 23. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இளநிலை மீன்வளப் பட்ட படிப்பிற்கான இடங்களை அதிகரித்தல்

மீன்வளத் தொழில்நிறுவனங்கள், மீன் மற்றும் இறால் வளர்ப்பு பண்ணைகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை செயல்படுத்துவதற்கான மனிதவளத் தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இளநிலை மீன்வள பட்டப்படிப்பு மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கையானது, **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** நடப்பாண்டில் 110 லிருந்து 120 ஆக உயர்த்தப்படும்.

## 24. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி சார்ந்த சாதனைகளை கவுரவிக்க மீன்வள தொழில் நிறுவனங்களின் மூலம் 15 இலட்சம் ரூபாய் தனிநிதியம் ஏற்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் விருதுகள் வழங்குதல்

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமானது மீன்வள இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்ட படிப்புகளை வழங்கி வருகிறது. அம்மாணவர்களின் கல்வி சார்ந்த சாதனைகளை கவுரவிக்க **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மீன்வள தொழில் நிறுவனங்களின் மூலம் 15 இலட்சம் ரூபாய் தனிநிதியம் ஏற்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின்போது விருதுகள் வழங்கப்படும்.

## 25. சென்னை, வாணியஞ்சாவடி மீன்வள முதுகலைப்பட்டப் படிப்பு நிலையத்திற்கு தேவையான மனிதவளத் தேவையினை பூர்த்தி செய்ய 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் வழங்குதல்

சென்னை, வாணியஞ்சாவடியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன்வள முதுகலைப்பட்டப் படிப்பு நிலையத்தில், நடப்பாண்டில் மீன்வள அறிவியல் மற்றும் மீன்வள உயிரியல் தொழில்நுட்பப்பிரிவில் ஐந்து பாடங்களில் முதுநிலைப்பட்டப் படிப்பும், வணிக மேலாண்மை, மூலக்கூறு மற்றும் மரபியல் சார்ந்த தொழில்நுட்பத்தில் பட்டப் படிப்புகளும் வழங்குவதற்கு தேவையான மனிதவளத் தேவையினை பூர்த்தி செய்ய **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 26. ஆழ்கடல் மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மேலாண்மை மையங்கள் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தூத்தூரில் நிறுவதல்

அண்மை கடல் பகுதியில், மீன்பிடி அழுத்தத்தினை குறைத்திடவும், பாக் வளைகுடா மாவட்டங்களை சார்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையால் இன்னலுக்குள்ளாவதை தடுக்கும் நோக்குடன் தமிழக அரசு ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவிக்கும் விதமாக ஆழ்கடல் சூரைமீன்பிடி படகுகளை கட்டுவதற்கு 70 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக 56 இலட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்வளத் தொழில்நுட்பங்கள் தொடர்பான பிரத்தியேக பயிற்சிகளை அளிப்பதற்காக **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தூத்தூரில் ஆழ்கடல் மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மேலாண்மை மையங்கள் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தால் நிறுவப்படும்.

## 27. மீனவ சமுதாயத்தைச் சார்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப்பணியில் சேருவதற்கான போட்டி தேர்வில் சிறப்பிக்க ஆயத்த பயிற்சி அளித்தல்.

தமிழ்நாட்டின் மொத்த மீனவ மக்கட்தொகை 12.14 இலட்சம் ஆகும். தமிழக அரசு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம், இந்திய குடிமைப்பணிகளில் சேருவதற்கான பயிற்சியினை அளித்து வருகிறது. இப்பயிற்சியில் சேருவதற்காக நடத்தப்படும் போட்டித் தேர்வில், மீனவ சமுதாயத்தை சேர்ந்த பட்டதாரி இளைஞர்கள் தேர்ச்சி பெறாத சூழ்நிலை உள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மற்றும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் இணைந்து, ஆண்டுதோறும் மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 20 பட்டதாரி இளைஞர்களை தேர்ந்தெடுத்து தனிக்குழுவாக அமைத்து அவர்களுக்கு இந்திய குடிமைப் பணிக்கான போட்டித் தேர்வில் கலந்துகொள்ள ஏதுவாக **இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் தனி பயிற்சி அளிக்கப்படும். இதற்கான ஆண்டு பயிற்சிக் கட்டணம் 10 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஏற்கும்.

**D.ஜெயக்குமார்**
மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்